பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 03 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. மேற்காசிய சூழலால் ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து மக்களை காக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தியாகிகள் தினத்தையொட்டி, சுதந்திரப் போராட்ட வீரர்கள் பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் உள்ளிட்ட தலைவர்களுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

3. அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

4. உலக வானிலை ஆய்வு மைய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Harshith Damodaran** தங்கப்பதக்கம் வென்றார்.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>>

மேற்காசிய நாடுகளில் நிலவும் மோதல் உலக நாடுகளை ஏதேனும் ஒரு வகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய அவர், இதன் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அமைச்சரவைச் செயலர் டாக்டர் டி வி சோமநாதன், மேற்காசிய நாடுகளில் நடைபெறும் மோதலால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

வேளாண்மை, உரம், உணவு பாதுகாப்பு, பெட்ரோலியப் பொருட்கள் விநியோகம் போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது, உணவு, எரிபொருள், பாதுகாப்பு உள்ளிட் டவிஷயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அத்தியாவசியத் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால செயல்திட்டங்கள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ரசாயனம், மருந்துப் பொருட்கள், பெட்ரோ ரசாயனம் மற்றும் தொழில்துறைக்கு தேவையான இறக்குமதியை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேற்காசிய நாடுகளில் நிலவும் மோதலால் உள்நாட்டில் ஏற்படும் பாதிப்புகளை களைவதற்கு அமைச்சகங்கள் அளித்த பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பிரதமர் அலுவலகத்தின் சார்பில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

சுதந்திரப் போராட்ட தியாகிகள் நினைவுதினத்தையொட்டி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் உள்ளிட்ட தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மக்களவையில் அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா பேசுகையில், இளம் வயதிலேயே நாட்டுக்காக துணிச்சலுடன் போராடி இன்னுயிரை

ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம் மிகவும் உயர்ந்தது என்று கூறினார்.

அவர்களின் மன வலிமையும், வீரமும், நாட்டுப்பற்றும், நாட்டின் சுதந்திரத்திற்கான வலிமையான அடித்தளமாக அமைந்தது என்று கூறினார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகமும், நாட்டுப்பற்றும் நாடெங்கிலும் உள்ள இளைஞர்களுக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது என்றும் திரு ஓம். பிர்லா குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் பேசிய அவைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் தாப்பர் ஆகியோரின் தியாகத்தை போற்றும் வகையில் தியாகிகள் தினம் அனுசரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அவர்களின் ஈடு இணையில்லா மனவலிமையும், சுதந்திரப் போராட்ட உணர்வும், மாபெரும் தியாகமும் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கியது என்று குறிப்பிட்டார்.

நாம் ஒவ்வொருவரும் அரசியல் சாசன மாண்புகளையும், ஜனநாயகத்தையும் காக்க வேண்டும் என்ற உறுதிபாட்டை இந்நாளில் ஏற்போம் என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த்தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவின் நினைவுநாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வீரர்களின் தைரியம், தியாகத்திற்கு தலைவணங்குவதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த வீரர்களின் தியாகம், மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளதாக கூறியுள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக இன்னுயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

<<<<<<>>>>>>

அசாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறுகிறது. வேட்புமனுக்களை திரும்பப் பெற வரும் 26-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அசாமில் இன்று மாலை மூன்று மணியுடன் வேட்பு மனுத்தாக்கல் நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**Kamrup** மாவட்டத்தில் பிஜேபி சார்பில் விஜய் குப்தா, **Diplu** ரஞ்சன் சர்மா உள்ளிட்டோரும், காங்கிரஸ் சார்பில் மீரா, கவுரவ் கோகோய் உள்ளிட்டோரும் போட்டியிடவுள்ளனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட டாக்டர் ராம் மனோகர் லோஹியாவின் பிறந்த நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி,

போராடியவர் டாக்டர் ராம் மனோகர் லோஹியா என்று குறிப்பிட்டுள்ளார்.

1947-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்பு நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றவர் லோஹியா என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதில் அவர் தீவிரமாக செயல்பட்டார் என்றும் கூறியுள்ளார்.

பாலின சமத்துவம் மக்கள் பங்களிப்போடு அரசு நிர்வாகம் போன்ற லோஹியாவின் உயர்ந்த சிந்தனைகள் என்றும் போற்றத்தக்கவை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், டாக்டர் ராம் மனோகர் லோஹியாவின் பிறந்நாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சமூக நீதி, மக்கள் பங்களிப்புடனான ஜனநாயகத்துக்காக அவர் பாடுபட்டவர் என்று கூறியுள்ளார்.

தொலைநோக்கு சிந்தனையோடு சமூக நீதிக்காகவும் அவர் பாடுபட்டார் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

உலக வானிலை ஆய்வு மைய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1950ம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி உலக வானிலை ஆய்வு அமைப்பு உருவாக்கப்பட்டதை குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இன்றைய தினம் உலக வானிலை ஆய்வு மைய தினமாக கடைபிடிக்கப்பட்டு வருவதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை, எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(*Sound Byte — வி ஆர் துரை — 55 Sec. )*

<<<<<<>>>>>>

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர், தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து தமிழகத்தின் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியர் யோகா பயிற்சி செய்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதில் பங்கேற்ற மாணவிகள், 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதாக தெரிவித்தனர்.

***(Sound Byte — மாணவிகள் - 51 Sec. )***

<<<<<<>>>>>>

ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ், 16 கோடி வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலக தண்ணீர் தின மாநாட்டில் உரையாற்றிய அவர், நீர் சேமிப்பு மற்றும் நிலையான தண்ணீர் மேலாண்மை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படுவதாக கூறினார்.

ஆற்று நீரை தூய்மையாக வைப்பதில் அரசு உறுதிபூண்டிருப்பதாகவும், நவாமி கங்கா போன்ற திட்டங்கள் மூலம் இதை செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தண்ணீரை சேமிப்பதற்கும், பாதுகாப்பாக வைப்பதற்கும் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு சி ஆர் பாட்டீல் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Harshith Damodaran** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஜூனியர் வால்ட் பிரிவில் மொத்தம் **13** புள்ளி ஆறு ஆறு புள்ளிகள் பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------------

சிங்கப்பூர் தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sajan Prakash** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**200** மீட்டர் பட்டர்ஃபிளை இறுதிப்போட்டியில் ஒரு நிமிடம் **57** புள்ளி பூஜ்யம் ஒன்பது வினாடிகள் நீந்தி அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க **Sajan Prakash** தகுதிபெற்றுள்ளார்.

**<<<<<<END>>>>>>**